**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது ரிக் ஹான்ஸென் ஃபவுண்டேஷன் (Rick Hansen Foundation) வழங்குகின்ற இலவசமான அணுகத்தக்க தன்மைக்கான சான்றிதழை அதன் பத்து இடங்களுக்கு பெறவிருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 1, 2020) – ப்ராம்ப்ட்டன் நகரில், இருக்கின்ற பத்து அமைவிடங்கள் ரிக் ஹான்ஸென் ஃபவுண்டேஷன்-இன் அணுகத்தக்க தன்மைக்கான சான்றிதழ் வழங்கும் (Rick Hansen Foundation Accessibility Certification™ (RHFAC)) திட்டம் மூலமாக, கட்டிடங்களை எளிதில் அணுகும் தன்மைக்கான சான்றிதழ் பெறுவதற்கு கட்டியம் கூறும் வகையில் பத்து அமைவிடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த இலவச RHFAC தரவரிசைகளை பெறுவதன் மூலமாக, இந்த பத்து தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிடங்களில் அணுகல் தன்மை இருக்கும் அளவைப் பார்த்து புரிந்துகொண்டு, எதிர்காலத்தில் இத்தகைய அணுகல் தன்மையை இனம் கண்டு மேம்படுத்த முடியும்..

தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து கட்டிடங்களாவன:

- லெஸ்ட்டர். பி.பியர்ஸன் தியேட்டர்
- தி ரோஸ் தியேட்டர்
- பி ஓ ஏ (POA) கோர்ட் ஹவுஸ்
- கோர் மெடோஸ் கம்யூனிட்டி சென்டர் அண்ட் லைப்ரரி
- கேஸ்ஸி கேம்ப்பெல் கம்யூனிட்டி சென் டர்
- சிட்டி ஹால்
- பி எஃப் இ எஸ் அப்பேராட்டஸ் அண்ட் மெயின்ட்டன்ன்ஸ் ஃபெஸிலிட்டி
- ப்ராம்ப்ட்டன் கேட்வே டெர்மினல்
- ப்ரமீலியா ட்ரான்ஸிட் டெர்மினல்
- ஸ்ப்ரிங்டேல் லைப்ரரி

ஒன்ட்டேரியோ பிரதேசம் முழுவதிலுமாக ரிக் ஹான்ஸென் ஃபவுண்டேஷன் ஆனது தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளில் 250 இலவச தரவரிசை மதிப்பீடுகளை மேற்கொள்ளும்; இதற்காக ஒன்ட்டேரியோ அரசிடமிருந்து கிடைக்கும் நிதிக்காக நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். RHFAC திட்டமானது RHFAC வழிமுறைகளை உபயோகித்து இந்த அணுகல் தன்மைக்கான தர வரிசைகளை வணிகரீதியான கட்டிடங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்களுக்கு வழங்குவதற்காக, பயிற்சி பெற்ற தொழில் வல்லுனர்களை உபயோகிக்கிறது; இது கட்டிட உரிமையாளர்கள் மற்றும் அவற்றை மேலாண்மை செய்பவர்கள் தடைகளைக் கண்டறிந்து அகற்ற உதவும், மற்றும் அவர்களின் இடங்களில் சமுதாயத்தினர் தடையின்றி வலம் வரவும் உதவும்.

இலவச RHFAC தரவரிசை பெறுவதற்கான விண்ணப்பங்கள் தற்போது இந்த திட்டத்தின் இரண்டாம் சுற்றில் நவம்பர் 30, 2020 வரை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மேலும் அறிந்து விண்ணப்பிக்க வருகை தரவும் : www.rickhansen.com/ontarioratings

**விரைவான கூற்றுக்கள்**

- இந்த RHFAC தரவரிசைகள் கொடுப்பதானது, இந்த ஆண்டின் பிற்பகுதியில் துவங்கி 2021 ஆம் ஆண்டின் இலையுதிர்காலத்தின் போது முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- RHFAC திட்டம் மூலமாக தரவரிசை கொடுக்கப்படும் நிறுவன அமைப்புக்களுக்கு ரகசியமானதொரு மதிப்பெண் கொடுக்கப்படும் மற்றும் அவற்றுக்கான வெற்றி மற்றும் மேம்படுத்தலுக்கான முக்கிய விஷயங்கள் எவை என்பது பற்றியும் தெரிவிக்கப்படும்.
- இந்த திட்டத்தில் இரண்டு சான்றளிப்பு நிலைகள் உள்ளன : RHF அணுகல் தன்மைக்கான சான்றளிப்பு மற்றும் RHF அணுகல் தன்மைக்கான சான்றளிப்பு - தங்கத்தரம் .
- ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து வயது மற்றும் அனைத்து வகை நடமாடும் இயல்திறன் கொண்ட மக்கள் அனைவருக்கும், அவர்கள் வாழ்வில், பணியில், விளையாட்டுக்களில், சுற்றித்திரிவதில் மற்றும் நகரில் முதலீடு செய்தலில் சரிசமமான வாய்ப்புக்களை உறுதி செய்ய, நகரின் நிர்வாகமும் மற்றும் அதன் அணுகல் தன்மைக்கான ஆலோசனையளிக்கும் குழுவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ட்டன் நகரமானது ஒரு கலவையான தோற்றம் கொண்ட நகரம் ஆகும், மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான தடைகளை அகற்ற நாங்கள் கடமைப்பட்டுள்ளோம், இதனால் நமது பல்வேறான மக்கள் கொண்ட சமூகத்தில் உள்ள அனைவரும் முழுமையாக பங்கேற்க முடியும். நகரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து கட்டிடங்களுக்கான RHFAC தரவரிசைகளைப் பெறுவதற்கான வாய்ப்பை நான் வரவேற்கிறேன்; இதன் வகையில், ஒட்டாவா நகரில் முதலாவது ஃபவுண்டேஷன் சான்றிதழுக்கான முதலாவது கேட்புக் கலந்துரையாடலில் ரிக் அவர்களைச் சந்தித்ததை நான் அன்புடன் நினைவு கூர்கிறேன், அப்போது அவர் நமது நகரமும் விண்ணப்பிக்க ஊக்குவித்தார். நமது கட்டிடங்களின் அணுகல் நிலைகளை நன்கு புரிந்துகொள்வதற்காக, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் அணுகக்கூடிய ஒரு நகரத்தை உருவாக்குவதற்கு நாம் தொடர்ந்து பணியாற்றலாம்."

*- பேட்ரிக் பிரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

" அணுகல் தன்மைக்கான ஆலோசனைக் குழுவின் பிரதிநிதியாக இருக்கும் நான், நமது நகர கட்டிடங்களில் பத்து இலவச RHFAC மதிப்பீடுகளைப் பெறவிருக்கிறது என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். தடைகளை நீக்குவது என்பதே நமது நகரத்தை அனைவருக்கும் அணுகக்கூடியதாக ஆக்குகிறது, மேலும் எங்கள் கட்டிடங்களின் அணுகல் நிலைகளைப்

புரிந்துகொள்வதன் மூலம், மாகாண AODA விதிமுறைகளுக்கு இணங்கவும், அதைவிட நன்றாகவும் தகவல் கொடுக்கப்படும் அணுகல் மேம்பாடுகளை நாங்கள் செய்ய முடியும், இது அனைத்து குடியிருப்பாளர்களும் நமது நகரின் வசதிகளை அனுபவிக்க அனுமதிக்கிறது. "

*- பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 7 மற்றும் 8, அணுகல்தன்மைக்கான ஆலோசனைக்குழு கவுன்சில் உறுப்பினர், ப்ராம்ப்ட்டன் நகரம்; உறுப்பினர், பீல் பகுதி அணுகல்தன்மைக்கான ஆலோசனைக்குழு*

"ப்ராம்ப்ட்டன் நகரினுள்ளாக, அனைத்து இயல்திறன் கொண்ட மக்களுக்கும் சேவை செய்யும் கலவையான நகரை உருவாக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கள் பத்து இடங்களுக்கான RHFAC மதிப்பீடுகளைப் பெறுவதின் மூலமாக, அனைத்து ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கும் எங்கள் வசதிகளை எவ்வாறு அணுக ஏதுவாக்குவது என்பது பற்றிய கூடுதல் நுண்ணறிவுகளைப் பெறுவோம், மேலும் அதற்கேற்ப எதிர்கால அணுகல்தன்மைக்கான மேம்பாடுகளைச் செய்வதற்கான ஒரு நிலையையும் நாம் அடைவோம். "

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca *இல்* இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்..

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca